# "Divorce & Social Problems"

## A Sociological Study In Eravur

LIBRARY
30 OCT 2009
Eastern University, Sri Lanka.

Mrs. Rifaya Ansar

CS 2075

EU/IS/ 2002/(A)AC/275

FAC38
Project Report
Library - EUSL

DEPARTMENT OF SOCIAL SCIENCES,

(SOCIOLOGICAL UNIT)

FACULTY OF ARTS AND CULTURE,

EASTERN UNIVERSITY OF

SRI LANKA,

VANTHARUMOOLAI,

CHENKALADY.

2009.

PROCESSED
Main Library, EUSL

சமூகவியல் கற்கைநெறியில் உள்ளடங்குகின்ற இவ்வாய்வானது "மணமுறிவுகளும் சமூகப் பிரச்சினைகளும் ஏறாவூர் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு" என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகும்.. இன்று பெண்கள் அதிகமாக இளவயதில் திருமணம் செய்து கொடுக்கப்படுவதனால் மணமுறிவினாலும், அதிகம் பாதிக்கப்படும் நலிந்தவகுப்பினராக காணப்படுகின்றனர். இதற்கான காரணமாக முஸ்லிம் விவாக,விவாகரத்துச்சட்டத்தில் பெண்களுக்கு பாரபட்சமாக உள்ள சட்ட ஏற்பாடுகளாலும், ஏனைய அரசியல் அமைப்பு சட்ட ஏற்பாட்டில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறைபாடுகளாலும், பலதாரமணம், இள வயது திருமணம், சமூகச் சட்டங்கள், சமூக பாரம்பரிய கருத்தியல்கள்,சமூக வழக்கங்கள், வெளிநாட்டுப்பயணம், பொருளாதார நெருக்கடி, பிள்ளைகள் பெறமுடியாத நிலை, ஆணின் துர்நடத்தை, போதைவஸ்துப்பாவனை,பாலியல்பிரச்சினைகள்,கல்வி அறிவின்மை, பெண்களின் அறியாமை, சமூகத்தளத்தில் பெண்களின் இரண்டாம் பட்சநிலை போன்றவற்றை குறிப்பிடலாம். இதனால் இன்று இது தனிமனித பிரச்சனையாக மட்டுமல்லாது ஒட்டுமொத்த சமுதாயத்தின் பிரச்சினையாகவே உருவெடுத்துள்ளது. பெண்களும் ஆண்களும் வாழும் சமூகக் கட்டமைப்பினுள் பெண்களின் அனுபவங்கள், பாரபட்.சங்கள் தொடர்பான எண்ணக்கருக்கள் அர்த்தமுள்ளவையாக காணப்படுகின்றன. அதனால்தான் இத்தலைப்பை ஆய்வுப்பொருளாக தெரிவுசெய்துள்ளேன்.

இதற்காக ஆய்வுப்பிரதேசமாக ஏறாவூர்பிரதேசத்தையே தேர்ந்தெடுத்துள்ளேன். இப்பிரதேசமானது பெண்கள் என்ற பொருள்குறைந்த வகுப்பினரை அதிகமகக் கொண்ட பிரதேசமாகும். மூடநம்பிக்கைகளாலும் பாரம்பரிய,மரபு ரீதியான கருத்துக்களாலும் உருவாக்கப்பட்ட, அதிக வளர்ச்சியடையாத, சமூகமாற்றத்தை குறைவாக உள்வாங்கிக் கொண்ட பிரதேசமாகும். இங்கு கிராமத்தின் பிரதானபகுதிகளை விட எல்லைப் பகுதிகளிலேயே மணமுறிவுச் சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. ஏனெனில், இப்பகுதிகளிலேயேபெண்கள்,எழுத்தறிவின்மை, அறியாமை,விழிப்புணர்வின்மை,தொழில் வாய்ப்பின்மை,வறுமை, கல்விகற்காமை,போதைவஸ்துப் பாவனை என்பன அதிகரித்துக்

காணப்படுவதாகும்.இவ்ஆய்வறிக்கையானது இலகுவாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டப்படும் வகையில் ஐந்து அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. முதலாம் அத்தியாயமானது ஆய்வுக்கான அறிமுகத்தையும், இரண்டாவது அத்தியாயத்தில் ஆய்வுப்பிரதேசத்தின் வரலாற்றுப் பின்னணியும், ஆய்வுப்பிரதேச சமூகமும், பெண்களும் ஆய்வுப்பிரதேச சமூகக் கட்டமைப்பும், அதன் பிரிவுகளும், என்ற விரிவான பகுதியும் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மூன்றாவது அத்தியாயத்தில் திருமணம் மணமுறிவு தொடர்பான சமூகவியல் விளக்கங்கள் மற்றும் வரலாற்று அடிப்படையில் திருமணத்தின் தன்மை இலங்கையில் காணப்படும் திருமணம், மணமுறிவு தொடர்பான தனியாள் சட்டங்கள் பற்றியும் அச்சட்டங்களை முஸ்லிம் விவாக,விவாகரத்து சட்டங்களுடன் ஒப்பிடலும், அது தொடர்பான விமர்சனங்களும், அரசியலமைப்புச் சட்டங்களும் விளக்கப்பட்டுள்ளன.

நான்காவது அத்தியாத்தில் ஏறாவூர் சமுகக்கட்டமைப்பில் மணமுறிவு ஓர் சமூகவியல் பகுப்பாய்வு என்ற விடயத்தினுள் ஏறாவூரில் மணமுறிவு அதிகரிப்பதற்கான காரணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்தோடு பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களும், பிரச்சினைகளும் சமூக,பொருளாதார,உள,பண்பாட்டு ரீதியிலும் ஆராயப்பட்டுள்ளன. ஐந்தாவது அத்தியாயத்தில் மணமுறிவைத் தடுப்பதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மற்றும் ஆய்வுப் பிரச்சினை பரிசீலனையும், ஆய்வின் கருதுகோள் பரிசீலனையும் மற்றும் கோட்பாட்டு ஒப்பீடும் விளக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வறிக்கையின் இறுதியில் இளவயதில் மணமுறிவு செய்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட இரண்டு விவாகப்பதிவு மாதிரியும், ஆய்வுக்கான தரவுசேகரிக்கும் செயற்பாட்டின் ஒருபகுதியாக அமைந்த நேர்காணலுக்குப் பயன்படுத்தப்பட்ட மாதிரி வினாக்காத்தும், உசாத்துணை நூல் வரிசையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.. இவற்றை முழுமையாக நோக்குமிடத்து தற்கால சமூகப்பிரச்சினையை இவ்வாய்வானது வெளிப்படுத்துவதனால்,இப்பிரச்சினை தொடர்பில் பெண்களுக்கு ஏற்படும்பாதிப்புக்களும், பாரபட்சங்களும் மாற்றமடையலாம். என்பதையே இவ்வாய்வானது முக்கிய நோக்காகக் கொண்டது.

- ஆய்வாளர்-

# உள்ளடக்கம்

**பக்கங்கள்** பக்கங்கள்


முன்னுரை

நன்றியுரை

உறுதியுரை

## அத்தியாயம் ஒன்று

1.0 ஆய்வு அறிமுகம் 01-15

1.1 ஆய்வுப் பிரச்சினை 16

1.2 – ஆய்வுக் கருதுகோள் 17

1.3 – ஆய்வின் நோக்கம் 17

1.4 – ஆய்வுக்கோட்பாடு 18-21

1.5 – ஆய்வின் முறைமையியல் 21-24

1.6 – நூலாய்வு 24-26

## அத்தியாயம் இரண்டு

2.0 ஆய்வுப் பிரதேச அறிமுகம் 27

2.1 ஆய்வுப் பிரதேச வரலாற்றுப் பின்னனி 27-29

2.2 ஆய்வுப் பிரதேச சமூகமும் பெண்களும் 29-32

2.3 ஆய்வுப் பிரதேச சமூகக் கட்டமைப்பு 32-43

2.3.1 இனம் 32

2.3.2 மதம் 33

2.3.3 ஆய்வுப் பிரதேச குடும்பங்கள் 35-37

2.3.4 பொருளாதாரம் 40-43

2.3.4.1 தொழிலும் வேலைவாய்ப்பும் 42

2.3.4.2 வெளிநாட்டு வேலை வாய்ப்பு 43

2.3.5 கல்வி 37-40

2.3.6 பால் நிலை

2.3.7 திருமணம்

## அத்தியாயம் மூன்று

3.0 கோட்பாட்டு ரீதியானதும் எண்ணக்கரு ரீதியானதுமான விளக்கங்கள் 44-46

3.1 திருமணம் மணமுறிவு தொடர்பான சமூகவியல் விளக்கங்கள் 45-46

3.2 மணமுறிவு ஓர் அறிமுகம் 46-48

3.3 வரலாற்று அடிப்படையில் திருமணத்தின் தன்மை 48-55

3.4 இலங்கையில் காணப்படும் சட்டங்களும் அது தொடர்பான விமர்சனங்களும்

3.4.1 இலங்கையின் ஆட்கள் பற்றிய சட்டங்கள் 56-58

3.4.2 சமத்துவம் பேணும் வகையில் இயற்றப்பட்ட சட்டங்கள் 59-60

3.5 இலங்கையில் காணப்படும் தனியாள் சட்டங்கள் 60-62

3.5.1 திருமணம் மணமுறிவு தொடர்பான பொதுச்சட்டம் 62-66

3.5.2 திருமணம் மணமுறிவு தொடர்பான முஸ்லிம் சட்டம் 66-72

3.5.3 திருமணம் மணமுறிவு தொடர்ான கண்டியசசட்டம் 72-75

3.6 பொதுச்சட்டத்தில் பிள்ளைகளின் பாதுகாவல் 75

3.6.1 கண்டியச்சட்டத்தில் பிள்ளைகளின் பாதுகாவல் 75-76

3.6.2 முஸ்லிம்சட்டத்தில் பிள்ளைகளின் பாதுகாவல் 76-77

3.7 முஸ்லிம்சட்டமும் ஏனைய தனியாள் சட்டங்களும் தொடர்பான ஒரு ஒப்பிட்டு நோக்கு

3.7.1 முஸ்லிம்சட்டம் தொடர்பான விமர்சன நோக்கு 78-97

3.7.2 முடிவுரை 97-99

## அத்தியாயம் நான்கு

4.0 ஏறாவூர் சமுகக்கட்டமைப்பில் மணமுறிவு ஓர் சமுகவியல் பகுப்பாய்வு 100-102

4.1 மணமுறிவு அதிகரிப்பதற்கான காரணங்கள்

4.1.1 சமுகக் காரணிகள் 102

4.1.2 பொருளாதாரக் காரணிகள் 103

4.1.2.1 வெளிநாட்டு வேலைவாய்ப்பு 103

4.1.3 மதக் காரணிகள் 104

4.2 விவாகரத்தினால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் 105-111

## அத்தியாயம் ஐந்து

5.0 திர்வுகளும் ஆலோசனைகளும் 112

5.1 மணமுறிவைத் தடுப்பதற்கான செயல்முறைகள் 112-116

5.1.1 அரச சட்ட நடவடிக்கைகள் 112-114

5.1.2 சமுக செயற்பாடுகள் 114-115

5.1.3 குடும்பரிதியாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் 115-116

5.2 ஆய்வுப்பிரச்சினைப் பரிசிலனை 116-117

5.3 கருதுகோள் பரிசிலனை 117-119

5.4 ஆய்வுக்கோட்பாட்டுப்பரிசிலனை 119

5.5 முடிவுரை 120

### பின்னிணைப்புக்கள்

- உசாத்துணை நூல்கள் 121-123
- வினாக்கொத்து 124-128
- விவாகரத்து அத்தாட்சிப் பத்திரங்கள்